மாதர் மனோரஞ்சினி.

VOL. புத்த. க.	NOVEMBER, 1899. சென்னை, 1899-ஹு நவம்பர்-மீ.	NO. 9. இல. ௯

திருவள்ளுவ நாயனார் மனைவியாராகிய வாசுகியம்மாளின் சரித்திரம்.

(முன்தொடர்ச்சி.)

மார்க்கசகாய ரென்பவர் ஆயிரம் ஏர் வைத்துக்கொண்டு உழுது பயிர் செய்கின்றவராகையால், அந்த வேதாளத்தினால் உண்டாகுங்கெடுதி இவருக்கு அதிக நஷ்டமாயிருந்தது. அதுபற்றி ; திருமூலர் முதலிய மகாசித்தர்களும், மாதவர்களும் தவஞ்செய்கின்ற மலைக்குப்போய் அவர்களிடத்தில் விண்ணப்பஞ் செய்துகொண்டார். அதைக் கேட்ட அவர்கள் தங்களோடு தவஞ்செய்து கொண்டிருந்த திருவள்ளுவ நாயனாரோடு சொல்லும்படி கட்டளையிட்டார்கள். அப்படியே அவர் நாயனாரிடத்தில் விண்ணப்பஞ்செய்ய ஜீவகாருண்ணியரான அத்திருவள்ளுவநாயனார் அவ்வேதாளத்தை விபூதி பஞ்சாட்சரத்தினால் வென்று, ஜனங்களுக்குண்டாயிருந்த துன்பத்தை நீக்கியருளினார்.

நாயனாருடைய மகத்துவத்தையும், யோக்கியதையையும் கண்ட மார்க்கசகாயர் தான் முன்பு தெரிவித்திருந்த பிரகாரம் அதிக திரவியமும், ஓர் ஊரும் கொடுப்பது மல்லாமல், தன் செல்வக் குமாரத்தியாகிய வாசுகியம்மாளையும் அவருக்கு விவாகம் செய்துகொடுக்கவேண்டுமென்று எண்ணி, அவரிடம் விண்ணப்பம் செய்தார். அதற்கு நாயனார் உலகத்தாருக்கு இல்லறவியலை நடத்திக் காட்டவேண்டுமென்கிற ஒரு கருணையால், நான் கொடுக்கும் மணலை அன்னமாக்கி எனக்கிடுமானால் விவாகஞ்செய்து கொள்வேனென்று கட்டளையிட்டார். நாயனார் உலகத்தில் ஆண்மக்களுக்கு இல்லறவியலை நடத்திக் காட்ட கருணை கொண்டவராகையால், அதன்படி வாசுகியம்மாளும் பெண்மக்களுக்கு இல்லறவியலை நடத்திக் காட்ட மனமிசைந்தவராகையால் அப்படியே சம்மதித்து சமைத்துப் படைத்தார்கள். இதனால் அந்தம்மாள் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்னும் நீதி வாக்கியத்தை விளக்கிக் காட்டினவராகிறார்கள்.

பிறகு நாயனார் சம்மதித்து அந்தம்மாளை வேதவிதிப்படி விவாகஞ் செய்துகொண்டார். விவாகமானவுடன் பெண், புருஷன் வீட்டுக்கு வந்தால் முதல் தினத்தில் அப்பெண்ணே சமையல் முதலியவைகள் செய்து யாவருக்கும் அன்னமிடுவது நமது பூர்வீகவழக்கம். அதுபோலவே வாசுகியம்மாளும் கலியாணமான முதல் தினத்தில் தன் புருஷராகிய நாயனாருக்கு அன்னமிட்டார்கள். அப்போது நாயனார் ஓர் சிறியபாத்திரத்தில் ஜலமும், ஒரு ஊசியும் கொண்டுவந்து வைக்கும்படி சொன்னார். அதற்கு "பெண்டிர்க்கழகெதிர் பேசாதிருத்தல்" என்னும் நீதி வாக்கியத்தைத் தன் போலொத்த பெண்மணிகளுக்கு தெரிவிக்கும்படி ஏனென்று கேளாமலே கொண்டுவந்து வைத்தார்கள்.

இப்படியாக வாசுகியம்மாள் நாயனாருடன் தன் தந்தை வீட்டிலேயே சிலநாள் இருந்தார்கள். பிறகு நாயனார் வாசுகியம்மாளை அழைத்துக்கொண்டு தான் முன்பு இருந்த மலைக்கு வந்து, அவ்விடத்தில் ஒரு வீட்டைக்கட்டிக்கொண்டு நெய்தல் தொழிலில் பாபமில்லை யென்று தெரிந்து, ஏலேலசிங்கனென்னும் ஒரு வர்த்தகனிடத்தில் நூலைவாங்கி வஸ்திரங்கள் நெய்து அதனால் வருங்கூலியால் இல்லறத்தை நடத்திக்கொண்டு வந்தார். அவ்விடத்தில் வாசுகியம்மாள் "கொழுநனுண்டபின்றுனுண்டல் கொள்கையும், விழிதுயின்றபின் றுஞ்சலு மென்றுயில், எழுதல் முன்னமெழுதலுமேயன்றே, பழுதில் கற்புடைப் பாவையர்க்காகுமே" என காசிகாண்டம் கற்பியலில் கூறியபடி நடந்து வந்தார்கள். அதாவது நாயனார் சாப்பிட்டபின் சேஷத்தைச் சாப்பிட்டும், நாயனார் படுத்துக்கொண்டபின் தான் அவர் காலடியில் உட்கார்ந்து காலைப்பிடித்துக் கொண்டிருந்து நாயனார் தூங்கியபின் தான் தூங்கியும், நாயனார் தூக்கத்தைவிட்டு எழுந்திருக்குமுன் தான் எழுந்து வீட்டுவேலைகளை யெல்லாம் முடித்து, தந்த சுத்தி செய்து, முகத்தைக் கழுவி, நெற்றில் குங்குமமிட்டுக் கொண்டு நாயனாரை எழுப்பி "குலமகட்குத் தெய்வம் கொழுநனே" என்றபடி வணங்கியும், நாயனாருடன் இல்லறவியலில் வழுவாது நடந்து வந்தார்கள்.

இவ்விதமாக வாசுகியம்மாளும் நாயனாரும் இல்லறத்தை நடத்திக்கொண்டுவரும்போது, ஒரு பெரியவர், "இல்லறம் பெரிதோ, துறவறம் பெரிதோ" என்கிற சந்தேகமுடையவராய் நாயனாரிடம் கேட்டுத்தெளிய வந்தார். அப்பெரியவர் நாயனாரிடத்தில் அநேக நாள் பணிவிடைசெய்துகொண்டு காத்திருக்க, அவரே தெரிந்துகொண்டு போகட்டுமென்று சும்மாவிருந்தார். இப்படி சிலநாள் சென்ற பிறகு, ஒரு நாள் வாசுகியம்மாள் கிணற்றினின்றும் ஜலம் தூக்கிக்கொண்டிருக்கும் பொழுது, அந்தம்மாளை நாயனார் அழைக்க, தூக்கின குடத்தை பாதி கிணற்றில் அப்படியே நிற்கும்படிவிட்டு வந்ததை அப்பெரியவர் பார்த்தார். பிறகுசில தினங்கள் பொறுத்து வாசுகியம்மாள் நாயனாருக்கு பழையது பரிமாறி நிற்கையில், நாயனார் பழையது சுடுகிறதென சிக்கிரம் விசிறி கொண்டு விசிறியதை அப்பெரியவர் இரண்டாந் தடவை கண்டார். அப்புறம் சில தினங்கள் சென்ற

பின் ஒரு நாள் நல்ல பகற்காலத்தில் இருட்டில்லாதவிடத்தில் நாயனர் துணி நெய்து கொண்டிருந்தார். அப்போது தன்கையிலிருந்து தவறி விழுந்தநூல்குழலை எடுக்கும் பொருட்டு, விளக்கு கொண்டு வரச சொல்ல வாசுகியம்மாள் கொண்டுவந்ததை அப்பெரியவர் கண்டார். இவைகளினுல் அப்பெரியவர் "பத்தாவுக் கேற்றபதிவிரதை யுண்டாஞல், எத்தாலுங் கூடியிருக்கலாம்- சற்றேறனும், ஏறுமாறுக விருப்பளேயாமாயிற், கூறுமறச்சந்நியாசங்கொள்." என்கிற ஔவையார் பாடலைக்கொண்டு இப்பேர்ப்பட்ட மனைவியுடன் வாழப்பெற்றால் இல்லறம்பெரிதென்றும், இல்லாவிட்டால் துறவறமே பெரிதென்றும் வாசுகியம்மாள் காட்ட சந்தேகந்தீர்ந்தவராய் போய்விட்டார்.

இவ்விதமாக வாசுகியம்மாள் நாயனரோடு அநேக காலம் இல்லற தருமத்தில் சிறிதும் குற்றம் நேரிடாமல் வாழ்ந்திருந்து, மோட்சமடையுந் தினத்தில் நாயனருடைய முகத்தைப்பார்த்தார்கள். அப்போது ஏன் என்னைப் பார்க்கிறுயென்று கேட்டார். அதற்கு அந்தம்மாள் நான் தங்களை மணம் புரிந்த தினத்தில் தங்களுக்கு அன்னம் படைத்து நிற்கையில், ஓர் சிறிய பாத்திரத்தில் ஜலமும, ஒரு ஊசியும் வைக்கும்படி கட்டளையிட்டீர்களே அவை ஏன்? அது எனக்குச் சந்தேகமாகவிருக்கிறதென்று கேட்டார்கள். அதற்கு நாயனர் அன்னம் தவறி கீழேவிழுந்தால் அதை ஊசியினுல் எடுத்து அலம்பிச் சாப்பிடுவதற்கென்று சொன்னார். அதனுல் சந்தேகம் நீங்கி வாசுகியம்மாள் மோட்சமடைந்தார்கள்.

இன்னும்வரும்.

அம்மாகண்ணு அம்மாள்.

Elements of Domestic Economy : Introduction.

குடும்ப சம்ரக்ஷணையின்முறை.

முகவுரை.

உலகத்தில் ஜனங்கள் தங்கள் வாழ்நாளைக்கழிக்கும்பொருட்டு பற்பல கைத்தொழில்களையும், வியாபாரங்களையும், உத்தியோகங்களையும் கைக்கொண்டிருக்கிறார்கள். அதாவது, ஜனங்களுக்கு தாங்கள் நடத்தும் காரியங்களைப்பற்றியும், வியாபாரங்களைப்பற்றியும் தொழில்கள் ஏற்படுகின்றன. வியாபாரம், உத்தியோகம், சிற்பத்தொழில் (கட்டடவேலை) பயிர்த்தொழில், முதலான தொழில்களில் பிரவேசிக்கிறவர்கள் முறையே வர்த்தகர்கள், உத்தியோகஸ்தர்கள், சிற்பிகள், விவசாயிகள் என்னும் பெயர்களை அடைகிறார்கள். இப்படி ஒவ்வொரு தொழிலைச் செய்பவர்களுடைய அபிவிருத்தி அந்தந்த தொழில்களில் அவர்களுக்குள்ள சாமர்த்தியத்தை அநுசரித்திருக்கிறது. எந்த வேலையிலாவது ஒருவன் லாபத்தை அடையவேண்டுமானுல் அவனுக்கு மிகவும் அநுபவமிருக்கவேண்டும். ஆனுல் அநுபவம்

ஒன்று மாத்திரம் போதாது. ஏனெனில், சில வேளைகளில் ஒருவனுடைய அநுபவத்தில் வராத சங்கதிகள் அந்நியர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவை தன்னுடைய அநுபவத்தில் இல்லாதபடியால் வர்த்தக முதலிய வியாபாரங்களில் அதிக நஷ்டமுண்டாகும்படி நேரிடும். இதுவுமன்றி எந்தக்காரியங்களிலேயும் சாமர்த்தியத்திற்கு அநுபவம் ஒன்றே உபாயம் என்றால் புதிதாய் அந்த தொழிலைச் செய்ய ஆரம்பித்தவனுக்கு நெடுநாள் வரைக்கும் நஷ்டமே உண்டாகவேண்டியிருக்கும். வைத்தியம் செய்ய ஆரம்பித்தவனுக்கு அநுபவம் அடையும் வரைக்கும் வியாதிபஸ்தர்களுக்கு கெடுதியுண்டாய்க்கொண்டே இருக்கவேண்டும். புதிதாய் வியாபாரஞ்செய்ய ஆரம்பிக்கிறவன் அநுபவம் அடையும் வரையிலும் பொருளை இழந்து கொண்டே வரவேண்டும். புதிய நியாயாதிபதி உத்தியோகத்தை (அதிகாரத்தை) அடைகிறவன் குடிகளுக்கு அநியாயத்தையே செய்துவரவேண்டும். ஆனால் சாதாரணமாய் உலகத்தில் அப்படி நேரிடாமலிருப்பதனால் எந்த வியாபாரத்திலும் சாமர்த்தியத்தை அடைய அநுபவம் ஒன்றேயன்றி கல்வியுங்கூட மற்றொரு உபாயமெனத் தெளிவாக ஏற்படுகின்றது. இக்கல்வி, இரண்டு விதங்களாகப் பிரிகின்றது. முதலாவது நெடுநாளாக பெரியோர்களால் வழங்கிவருகிற பழமொழிகளை அநுசரித்து நடப்பது (அதாவது "ஊரோடொத்துவாழ்" "அதிக ஆசை அதிக நஷ்டம்" என்கிறதை அநுசரித்து நடப்பதுதான்.) இரண்டாவது சாஸ்திரத்தை அநுசரித்து நடப்பது (அதாவது சாஸ்திரங்களைப்படித்து அவைகளில் சொல்லியபடி நியாயமென்று விதித்தவைகளைக் கைக்கொண்டும், நியாயமல்லவென்று விலக்கியவைகளைக் கொள்ளாமலும் நடப்பது) மேற்சொன்ன இரண்டுவித அறிவுகளில் முதல் சொன்ன அறிவினாலேயே விசேஷமாய் உலகத்திலுள்ள வியாபாரங்கள் நடக்கின்றன. ஆனால் அநேக ஜனங்களுடைய அநுபவங்களிலும், எல்லாரும் அநுபவித்துத் தெளியும்படி உண்மையை உணர்த்தக்கூடிய சாஸ்திர அறிவே சிறந்ததென்று சொல்வதற்கு வேறு அத்தாட்சி வேண்டியதில்லை. இந்த அறிவு அந்தந்த தொழில்களைக் குறித்துக் கற்பிக்கிறதினால் சிற்பசாஸ்திரம், கிருஷிசாஸ்திரம், வியாபாரம் முதலான அநேக பேர்களால் விளங்குகின்றன.

மனிதர்கள் இப்படி அநேக விதங்களான தொழில்களைச் செய்ய ஆரம்பித்தவர்களாயினும், எல்லாருக்கும் சாதாரணமாய் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அதென்னவெனில் குடும்ப சம்ரக்ஷணையின் முறையைப் பற்றிய விஷயங்களைச் சீர்திருத்திக்கொள்வதே.

My Jewels.

என்னுடைய ஆபரணங்கள்.

மங்களபுரியென்னும் பட்டணத்தில் சுசீலன் என்னும் ஓர் தனவந்தன் இருந்தான். அவன் குணத்திலும், செல்வத்திலும் மேம்பட்டிருந்ததோடு கல்விச்செல்வத்திலுங் குறைவில்லாதவனாயிருந்தான். அச்செல்வவந்தன் தன் அந்தஸ்துக்குக் குறைவில்லாதவளும், கல்விச்செல்வமுள்ளவளும், சற்குணசம்பன்னமுடையவளும், கற்பில் (வடமீன்) அருந்ததியை யொத்தவ

ளுமாகிய சௌபாக்கியாம்பாள் என்னும் மாதரசியைக் கலியாணஞ்செய்துகொண்டு இல்லறத்தை நடத்திவரும்நாளில், இவ்விருவரும் செய்த நல்வினைப்பயனெல்லாம் திரண்டு ஓர் உருவமாய் வந்ததென்று கண்டோர் சொல்லும்படி சௌபாக்கியாம்பாள் நல்ல சுபமுகூர்த்தத்தில் ஓர் ஆண்குழந்தையைப்பெற்றாள். பாக்கியங்களுக்கெல்லாம் முதன்மையாகிய புத்திரபாக்கியமுண்டாய்விட்டதென்ற வார்த்தையைக் கேட்ட தந்தையாகிய சுசீலன் தானதர்மங்கள் செய்து, பட்டணமெங்கும் சர்க்கரைவழங்கி, பெரியோர்களைக்கொண்டு குழந்தைக்கு இரத்தினவேலு என்ற பெயரை இட்டு வளர்த்து வந்தான். பிள்ளைக்கு இரண்டுவயதாக சௌபாக்கியாம்பாள் மறுபடியும் கருப்பமடைந்து பத்தாம்மாதம் பாலசந்திரனும் வெட்கமடையும்படியான அழகுடையதாகிய ஓர் குழந்தையைப் பெற்றெடுத்தாள். சுசீலன் இப்பிள்ளைக்கும் செய்யவேண்டியவைகளை யெல்லாம் கிரமப்படி செய்து சிங்காரவேலு என்ற பெயரை இட்டான். இக்குழந்தைகளிருவரும் சுக்கிலபட்ச சந்திரன்போல் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து கல்விகற்கும் பருவமடைந்தார்கள். அது கண்ட சுசீலன் ஒரு சுபதினத்தில், உயர்குடிப் பிறப்புமுதலாகிய நல்ல லக்ஷணம் அமைந்த ஒரு உபாத்தியாயரை அழைத்து, வித்தியாரம்பஞ்செய்து பாடசாலைக்கு அனுப்பிவைத்தான். அவ்விருசிறுவர்களையும் கண்ட எவரும் இவர்களைப்பிள்ளைகளாய்ப்பெற்ற தாய் தந்தையர்கள் என்ன தவஞ்செய்தார்களோ என்று சொல்லும்படியாக கல்வியிலும், நல்லொழுக்கங்களிலும் சிறந்து விர்த்தியாகி விளங்கினார்கள்.

இவ்வாறிருக்கையில், சௌபாச்யாம்பாளின் பாலிய சிநேகிதியாகிய சண்பகம் என்னும் ஓர் பெண் இருந்தாள். அவள் செல்வவந்தனுக்கு வாழ்க்கைப்பட்டு அடுத்த வீதியில் குடியிருந்தாள். அவள் கல்வி என்னும் மணம் சிறிதேனும் இல்லாதவளாய் நகைப்பைத்தியமும், அகம்பாவமுடையவளுமாயிருந்தாள். அவள் ஓர் அலங்காரப்பிரியை. எக்காலத்திலும் தனது கணவனை நகைகள் வாங்கிக்கொடுமென்றும், துணிகள் வாங்கிக்கொடுமென்றுமே கேட்டுவருவாள். அவன் தான் படிப்பதற்காக எதாவது புத்தகங்கள் வாங்கிவருவதை இவள் பார்த்தால் அன்றைய தினம் “ராம ராவணயுத்தம்போல” அவனுடன் சண்டைபோடுவாள். இவள் தன்னை எக்காலமும் விலையுயர்ந்த இரத்தினம் பதித்த ஆபரணங்களால் சிங்காரித்துக்கொண்டு, மூடப்பெண்களின் கூட்டத்தில் சென்று தன்னுடைய நகைகளின் சிறப்பையும், விலையுயர்ச்சியையும், அவைகளின் வேலைத்திறத்தையுமே புகழ்ந்துபேசுவாள். தன் நகைகளைப்பற்றி புகழ்வோரிடத்தில் விருப்பமும், புகழாதவர்களிடத்தில் வெறுப்புங்கொள்ளுவாள். ஓர் நாள் சாயங்காலம் சண்பகம் தன்னுடைய பாலியத்தோழியாகிய சௌபாக்யாம்பாளைக் காண விரும்பி, தன்னைச்சிங்காரித்துக்கொள்ளச்சென்று சம்பங்கி எண்ணெய் தடவி மயிரைச் சீவிச் சிடுக்கறுத்து, தங்கத்தால் செய்த கல்லிழைத்த திருகுபூதிருகி, காதில் வைரக்கம்மல், ஜிமிக்கை, கொப்பு, மயிர்மாட்டி முதலியவை அணிந்துகொண்டும், மூக்கில் மூக்குத்தி, புலாக்கு, நத்து முதலியவை தொங்கவிட்டுக்கொண்டும், கழுத்தில் கண்டச

ரம், காறை, சந்திரஹாரம், காசுமாலை, முத்தாரம் என்னும் பலவித நகைகளைத்தரித்துக்கொண்டும், கையில் பட்டணக்காப்பும், கொலுசும், பாட்டிலும், விரலில் கணையாழியும், மோதிரங்களும், மாட்டிக்கொண்டும், காலில் பாடகம், தண்டை, பாதசாலம் முதலியவை பூட்டிக்கொண்டும், பச்சைப் பட்டினுல்தைத்திருக்கும் இரவிக்கையைப் போட்டுக்கொண்டும், செம்பட்டில் சரிகைப்பூவிட்ட காசிப்பட்டுக் சேலையை அரையில் உடுத்தி அதன் மேல் தங்கத்தால் செய்த ஒட்டியாணம் அணிந்துகொண்டும், கல்விகற்காத தன் அங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் தானே சிட்சைசெய்துகொண்டு சௌபாக்கியாம்பாளுடைய வீட்டை நோக்கிவந்தாள். அதைக்கண்ட சௌபாக்கியாம்பாள் சந்தோஷகரமான முகத்தோடு எதிர் சென்று தக்கபடி உபசரித்து அழைத்துவந்து தகுந்த ஆசனத்தின் மேலிருக்கச்செய்து தானும் பக்கத்தில் உட்கார்ந்து வார்த்தையாடிக்கொண்டிருந்தாள். அப்பொழுது சண்பகம் தன் வழக்கப்படி தனது நகைகளைப்பற்றியும், அவைகளுடைய அதிகவிலைகளைப்பற்றியுமே பேசிக்கொண்டிருந்தாள். ஆனால் சௌபாக்கியாம்பாளோ! அவைகளைச் சட்டைசெய்தவளுமல்ல; அல்லது அந்நகைகளை ஆசையோடு பார்த்தவளுமல்ல. அது கண்ட சண்பகம் இதினும் விலையுயர்ந்த நகைகள் இவளிடத்தில் இருக்கவேண்டுமென்று எண்ணி, "எனது சிநேகிதியே உமது நகைகளைத் தயவு செய்து சற்று காட்டுவீரா" வென்று வேண்ட, சௌபாக்யாம்பாள் "ஆம், நேசியே, என் நகைகளை உமக்குக் காட்டுவதில் தடையேயில்லை. ஆனால் அந்நகைகள் இப்போது என்னிடத்தில் இல்லை. சற்று நேரம் பொறுப்பீராயின் காட்டுவேன்" என்று கூறினாள். அத்தருணத்தில் அவளுடைய அருமை மைந்தரிருவரும் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்தார்கள். சௌபாக்யாம்பாள் தன் அருந்தவச்செல்வர்களைச் சண்பகத்தின் முன்னே இட்டுக்கொண்டுவந்து நிறுத்தி "என் சிநேகிதியே? இவர்கள் தான் என்னுடையவிலையுயர்ந்த இரத்தினாபரணங்கள் என்று சொன்னாள். அது கேட்ட சண்பகம் வெட்கமடைந்து முகம்வாடிச் சிறிது நேரம் மௌனமாயிருந்து பேசாமல் தன் வீடு போய்ச் சேர்ந்தாள்.

இதை வாசிக்கும் என் அருமைச் சகோதரிகளே! வீண் டம்பமானது எக்காலத்தும் வெட்கத்துக் கிடமானதென்றும், அகத்தழகு வேண்டுமேயன்றி முகத்தழகு அழகல்லவென்னும் படிப்பினையையும்,

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாமென்னு நடுவு நிலைமையால்
கல்வியழகேயழகு"

என்னும் அருமை வெண்பாவையும் நினைவு கூரச்செய்கின்ற தென்பதைக் கவனிப்பீர்களாக.

ஓர் மாது.
திரிகோனமாலை.

அன்னபூரனி கதை.

முத்துசுவாமிபிள்ளை தன் மகளுக்குப் பல இடங்களிலும் மாப்பிள்ளை விசாரித்ததில் ஒன்றும் சரிப்படாமல் கடைசியாக சோளவந்தான் என்னும் கிராமத்தில் தன் மனைவியின் சிறியதாயார் பௌத்திரன் ராசப்பபிள்ளை என்னும் ஓர் சிறுவனுக்குக் கலியாணஞ் செய்து கொடுப்பதாக ஒப்புக் கொண்டு மாப்பிள்ளை சாதகத்தையும் வாங்கிக்கொண்டு ஊருக்கு வந்து சேர்ந்தார். உடனே ஜோஸியர்களை வரவழைத்துப் பெண்சாதகத்தையும் மாப்பிள்ளை சாதகத்தையுங் கொடுத்துப் பார்க்கச்சொன்னார். அவர்களிரண்டும் மூன்று நாளாகப் பார்த்துவிட்டு, பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கு மெல்லாப் பொருத்தங்களும் பொருந்தியிருக்கிறதென்றும் தாங்கள், அதுவரையிலும் பார்த்த சாதகங்களில் இதைப்போல எல்லாப் பொருத்தங்களும் சரியாய் அமைந்தது ஒன்றுமில்லையென்றும், மாப்பிள்ளைக்கு வயசு எண்பதென்றும், பெண்ணுக்கு எழுபதென்றும், இவர்களுக்கு ஆறு ஆண் பிள்ளைகளும் மூன்று பெண்பிள்ளைகளும் பிறக்குமேன்றும், தங்கள் வாயில் வந்தபடி எல்லாம்புளுகினார்கள். முத்துசுவாமிப்பிள்ளை இந்தப் புளுகுகளை எல்லாம் வேதமாக ஒப்புக்கொண்டு ஜோஸியர்களுக்கு வெகுமானங்கொடுத்தனுப்பிவிட்டு உடனே மாப்பிள்ளை வீட்டுக்குக்கடிதம் எழுதி முகூர்த்த நாளுங்குறித்துக் கலியாணத்திற்கு வேண்டிய சாமான்களை எல்லாம் சேகரஞ்செய்யத் திட்டம்பண்ணினார்.

ரோசம்மாளுக்குக் கலியாணம் என்று சொல்லவும் அவளுக்கிருந்த சந்தோஷத்திற்களவில்லை. பாவம்! சிறுகுழந்தைக் கென்னதெரியும்! அவள் அடுத்த வீட்டுப்பிள்ளைகளிடத்தில் அக்கா எனக்கு கலியாணம் வரப்போகிறதென்று அம்மா சொல்லுகிறார்கள், எனக்கு ரொம்பநகை போடுவார்கள், பட்டுப்பவாடை பட்டு ரவிக்கை தைத்துப்போடுவார்கள், வீட்டுக்குமுன் பெரிய பந்தல் போட்டுக் குலைவாழைகளெல்லாங் கட்டுவார்கள், பூக்கள் பழங்கள் நிரம்பவாங்குவார்கள், பலகாரம் பக்ஷணங்கள் செய்வார்கள், வாணம் மத்தாப்பு அதிர்வேட்டுக்கொளுத்துவார்கள், நானும் என் கணவனும் பல்லக்கில் ஊர்கோலம்வருவோம், அத்தை, சித்தி, பாட்டய்யா, பாட்டி எல்லாரும் வருவார்கள், என்றாள். அப்போது ஒரு பிள்ளை அடியே! உன் புருஷன் சிவப்பா, கறுப்பா என்று கேட்கவும் ரோசம்பாள் "சிவத்தப் பெண்ணுக்கு சிவத்தமாப்பிள்ளை, கறுத்தப்பெண்ணுக்கு கறுத்தமாப்பிள்ளை, நானும் சிகப்பு என் புருஷரும் சிகப்பு" என்றாள். தான்அடையப்போகுந்துன்பத்தை ரோசம்மாள் முன் அறிந்திருப்பாளானால் இப்படிப்பேசிக் களிப்பாளா?

முத்துசுவாமிபிள்ளை நல்ல தினத்தில் முகூர்த்தக்கால் நட்டு வைப்பப் பந்தல் போட்டுத் தன்பந்துக்கள், சிநேகிதர்கள், புரோகிதர்கள், ஜோதிடர்கள், பெரியவர்கள் முதலியசகலரையும் அழைப்பித்து மணப்பொங்கலிட்டு மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் நலங்கிட்டு ஓமசாந்தியும் பண்ணி அக்கினி

சாக்ஷியாய் ரரசப்பபிள்ளைக்கும், ரோசம்மாளுக்கும் விவாகம் செய்வித்தார். இந்தக்கலியாணத்துக்கு முத்துசுவாமிபிள்ளை செலவழித்த பணத்திற்குக்கணக்கில்லை. கல்யாணத்திற்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் அவரவர் அந்தஸ்திற்குத் தகுந்தபடி ஒன்றுங் குறைவில்லாமல் உபசரித்து பதினைந்துநாள் வரையும் ஒருவரையும் போகவொட்டாமல் பலவிதக்கொண்டாட்டங்கள் சதுராட்டங்களும் பலபலவேடிக்கை விநோதங்களும் நடப்பித்துப்பின்னர் கட்டாயமாய் பந்துக்களையும் பெரியோரையும் அனுப்பிவித்தார். கொஞ்சக்காலத்துக்குப் பிற்பாடு மாப்பிள்ளையையும் பெண்ணையுங்கூட்டிக்கொண்டு சோளவந்தானுக்குப் போய் சிலநாளங்கிருந்து மாப்பிள்ளையைத் தன் தகப்பனார் வீட்டிலேயேவிட்டுவிட்டு பெண்ணை அழைத்துக்கொண்டு தங்கள் சொந்த ஊராகிய திருப்புவனம் வந்து சேர்ந்து சந்தோஷமாய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஓர் மாது.

மரகதவல்லி சுந்தரவல்லி சரித்திரம்.

Chapter VIII.

வெகுளியே யுயிர்க்கெலாம் விளைக்கும் தீவினை
வெகுளியே குணந்தவம் விரதமாய்க்கு மால்
வெகுளியே யறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும் பகைவேறொன் றில்லையால்.

கோபமானது எல்லா உயிர்களுக்கும் கெடுதியை உண்டாக்குகின்றது; கோபமே ஒருவனுக்குண்டாகிய நற்குணத்தையும், செய்கின்ற தவத்தையும், அனுசரித்து வருகின்ற விரதத்தையும் கெடுக்கின்றது; கோபமே புத்தியைக் கெடுப்பது; அதிக கொடுமையைச்செய்யும் கோபத்தைப்போலவிரோதியாகியவஸ்து ஒருவனுக்கு வேறொன்று கிடையாது.

பத்மசீலமகாராஜாவின் அரண்மனையைவிட்டு மரகதவல்லி சுந்தரவல்லியிருவர் ஆண்வேடம் பூண்டு வெளிக்கிளம்பி நான்கு நாளாகியும் ஒன்றும் சமாசாரந்தெரியவில்லை. மூன்று நாளைக்குள் காணமற்போனவர்களைக் கண்டுபிடிக்காமலும் யாதொரு சங்கதியுந் தெரிவிக்காமலுமிருந்த வெங்கோபராவ் வீமராவ் இருவர்களின் மீது அரசனுக்கு அதிக கோபமுண்டாயிற்று. இந்த நான்காவது தினங்காலை தன் கொலுவிலமர்ந்தான். அமர்ந்தவுடன் அதிக கோபக் குறியோடு நான்கு பக்கத்திலும் அதிக உக்கிரத்துடன் பார்க்கையில் அங்கிருந்த அமைச்சர்கள் சிற்றரசர்கள் சேனதிபதிகள் வித்வாம்சர்கள் எல்லாம் நடுநடுக்கமுற்று என்ன வருமோ ஏது வருமோவென்றஞ்சினார்கள். அரசன்கண்களிலோ நெருப்புப்பொறி பறக்கின்றது. தன் சிம்மாசனத்திருந்தபடியே பிரதான மந்திரியைக் கூப்பிட்டுச் சிப்பாய்களின் தலைவனைக் கூடியசீக்கிரத்தில் அழைத்துவா வென்று ஆக்ஞாபித்தான். மந்திரியானவன் கட்டளையைச் சிரமீது தாங்கி யுடனே சிப்பாய்தலைவனாகிய

இராம்சிங் என்பவனை அரசன் முன்னிலையில் விட்டான். "ஓ இராம்சிங் மூன்று நாளைக்குமுன் காணாமற்போன என்னருமைப் புதல்விகளைக் கண்டுபிடித்து வரப்போன வெங்கோபராவ் வீமராவ் இவர்களின்னும் வரக்காணோம்; கொஞ்சமும் பயமின்றியெங்கே காலதாமதஞ்செய்து கொண்டு வீண்வார்த்தையாடிக் கலகங்கள் செய்கின்றார்களோ தெரியாது; உன்னுடன் பன்னிரண்டு பேர்களைத்தயார் செய்து நான்கு திக்கிலும் சென்றிருக்குமிடத்தைத் தேடி கை கால்களுக்கு விலங்கிட்டுச் சாயங்காலம் ஐந்துமணிக்குள் இங்கே வந்து சேரவேண்டியது! அப்படிச்சேராவிட்டால் என்னென்ன விபரீதங்கள் நேரிடுமோ நீயே இதற்கு உத்தரவுசொல்ல வேண்டியதாயிருக்கும்!" என்று மகா உக்கிரத்துடன் கட்டளையிட்டான்.

சிப்பாய்த் தலைவனான இராம்சிங்கேன்பவன் உடனே பன்னிரண்டு குதிரைக்காரர்களுடன் புறப்பட்டு திக்குக்கொருமூவராகச் சென்றார்கள். இராம்சிங்கு மாத்திரம் நான்கு திக்கிலும் போய் விசாரிக்கவேண்டு மென்கிற எண்ணங்கொண்டு அரசனது லாயத்திற்போய் அதிக விரைவாகச்செல்லு மோர் அசுவத்தைத் தயார் செய்து வடதிசையை நோக்கிச்சவாரிவிட்டான்.

இந்த சங்கதி இப்படியிருக்க அரசன் தன்னமைச்சர்களை நோக்கி என் சொல்லைக்கடந்து நடப்பவர்களுக்கு யாது தண்டனை விதிக்கவேண்டியது? என்னரிய பெண்கள் காணாமற்போய் இன்றைக்கு நான்கு தினங்களாகியும் போனவர்கள் ஒரு சங்கதியும் தெரிவிக்காமலும் வராமலுங் காலதாமதஞ் செய்கிறது என்ன தைரியத்தைப்பற்றியோ தெரியவில்லை. மூன்றாவது தினஞ்சூரியாஸ்தமனமாகிறதற்குள் வராவிடினிருவருடைய சிரங்களுமற்று விழுமென்று கட்டளையிட்ட பிரகாரம் அவர்களைக்கண்டுபிடித்துக்கொண்டுவந்தால் யாவருங் காணும்படி யவர்களைத் தூக்கிற் போடவேண்டியதே; உங்களுடைய அபிப்பிராயமென்னவென்று அதிக கோபக்குறியுடன் கேட்க அங்கிருந்தவர்களெல்லாம் நடுக்கமுற்று பதில் ஒன்றும் சொல்லாது மௌனமாயிருந்தார்கள். பத்மசீலன் உடனே சேனாதிபதியைக் கூவி "நீ சென்று நமது நகருக்கு வெளிப்புறத்தில் இரண்டு தூக்கு மரங்கள் தயார் செய்து எனக்கு சமாசாரத்தை யறிவிக்கவேண்டியது" என்று கட்டளையிட அவனவ்வாறே செய்து முடிக்கப்போய்விட்டான். வெங்கோபராவையும் வீமராவையும் தேடப்போனவர்கள் சாயங்காலம் ஐந்துமணிவரையிலும் வந்து சேரவில்லை. பத்மசீலனுக்கு சொல்லமுடியாத துக்கமும், கோபமும் மேலிட்டு மேலுக்கொன்றும் காண்பிக்காதவன் போலிருந்தான். அதிவேகமான அசுவத்தைத் தயார் செய்து ஒருவன் போனானென்று முன்னமே சொன்னோமே. அவன் வடதிசையைநாடி மல்லன் பாளையத்தில் வந்து விசாரிக்கவே யாரோ இரண்டு குதிரைக்காரர்கள் மூன்று நாளைக்குமுன்பு அங்கே தங்கி திருடர்களை வெளிப்படுத்தினார்களென்று சொல்வதைக்கேட்டு, அவர்களுடைய ரூபத்தாலும், அவர்களணிந்திருந்த உடைகளாலும் அடையாளந்தெரிந்து கொண்டான். இதனால் வெங்கோபராவ் வீமராவ் தான் இப்படிச் சென்றிருக்கவேண்டுமென்று யூகித்து இன்னும் அதிவேகமாக மெய்ஞ்ஞான புரமார்க்கமாகக் குதிரையைச் செலுத்தினான். அவன் மூன்று மணி

க்கு மெய்ஞ்ஞானபுரத்தின் எல்லைக்கண் சேர்ந்து அங்குள்ள வொவ்வொரு வீதியிலுமுலாவிக் கடைசியில் மலையடிவாரத்தில் வரும்போது அங்குநின்ற இருவர்களாகிய வெங்கோபராவ் வீமராவ் இவர்களைக் கண்டவுடன் ஒன்றும் பேசாது தனக்குமுன்பு புறப்பட்ட மூன்று சிப்பாய்களுடன் அவர்களை விலங்கிட்டு ஒருவாடகை வண்டிபேசி அதில் அவர்களை தூக்கிப்போட்டு வாயுவேகம் மனோவேகமாகக் கல்யாணபுரிக்கு சாயங்காலம் ஆறு மணிக்கு வந்து சேர்ந்தான். அரசன் இதைக்கண்டு தன் பெண்களின் சங்கதியை விசாரிக்க அவர்கள் நாங்கள் விசாரித்ததில் மெய்ஞ்ஞானபுரத்தில் இருக்கின்றார்களென்று கேள்விப்பட்டோமேயன்றி அவர்கள் தங்கியிருக்கும் கிரகம் தெரியவில்லை. அதனால் ஒவ்வொரு மூலையாகச் சென்று விசாரணை செய்திருக்கும்போது எம்மைக் கைப்பிடியாக விலங்கிட்டுக் கொணர்ந்தார்கள் எனவே அரசனுக்கு கோபம் பிறந்து நீங்களெத்தனை நாட்கள் தாமசஞ்செய்வீர்கள். என் புத்திரிகள் எட்டு நாளைக்குள் வருவதாக எழுதிவைத்துப் போனார்கள்,நீங்கள் போய் நான்கு நாளாகியுமொன்றும் செய்யவில்லை என்று சொல்லிக்கொண்டே முதல் பிரதானியை யழைத்து நாளைய காலை பத்துமணிக்கு அரசன் வார்த்தையைக்கடந்து மூன்று நாளைக்குள் காணமற்போன புத்திரிகளைக் கொண்டுவராமலும் வந்து சமாசாரத்தைத் தெரிவிக்காமலும் இருந்த குற்றத்திற்காக வெங்கோபராவ் வீமராவ் இவ்விருவரையும் தூக்கில் போடப்படுமென்று பறையறைவித்து வேண்டிய எத்தனங்களைச் செய்யக்கடவாய், மறுபேச்சு பேசவேண்டாமென்று பயமுறுத்தினன். அரசன் சொல்லியவாறே மந்திரி பறையடிப்போனைக்கூப்பிட்டு ஆக்ஞாபித்தபிரகாரம் ஊரெங்கும் தெரிவிக்கவேண்டியதென்று கட்டளையிட்டான்.

ஐந்தாம் நாள் காலையில் ஊருக்கு வெளிப்புறத்தில் அணியணியாக சேனைகள் நிற்கிறதையும், ஜனங்கள் திரள்திரளாகக் கூடிச்செல்கிற வேடிக்கையும், கூச்சல் போடுகிறதை யடக்குவதற்காக போலீசார் செய்கிற ஆரவாரத்தையும், தூரத்திற் பயங்கரமான தூக்குமரங்கள் சோடித்திருப்பதையும் யாரால் சொல்லமுடியும். மந்திரிகளும் சேனாதிபதிகளும் இராஜாங்கத்திலுள்ள உத்தியோகஸ்தர்களெல்லாம் அங்கு வந்து நெருங்கினார்கள்.

பி. ஷண்முகசுந்திரம் பிள்ளை, பி. ஏ.

ராணிபாபனி.

வங்காள இராஜதானியானது மகம்மதியருடைய ஆளுகையிலிருந்தபோது, சுதேச இராஜாக்களும் தங்கள் தங்கள் இராஜ்ஜியத்தை அரசாண்டு வந்தார்கள். இவர்கள் அதிக பராக்கிரமமுள்ளவர்கள். இவர்கள் தங்களிஷ்டப்பிரகாரம் அரசாட்சிசெய்து வந்தார்கள். வங்காள இராஜதானிக்கு முக்கிய பட்டணமாகிய மூர்ஷிடாபாத்தில் நவாப் வசித்துக்கொண்டு “இப்பொழுது கவர்னர் எவ்விதம் இராஜ்ஜிய பரிபாலனம் செய்து வருகிறாரோ

அவ்விதமே" இராஜ்ஜிய பரிபாலனஞ்செய்து வந்தார். சிற்றரசர்களாகிய சுதேச இராஜாக்கள் வருஷா வருஷம் தங்கள் கப்பங்களை நவாப்பு அவர்களுக்குக் கட்டிக்கொண்டு வந்தார்கள். இச்சிற்றரசர்களில் எவராவது தங்கள் கப்பங்களை கட்டத்தவறினால், நவாபு அவர்கள் தங்கள் இராணுவ உத்தியோகஸ்தர்களை அவர்களிடம் அனுப்பி கப்பத்தை வசூல்செய்தும், இனிசரியாக கப்பம் கட்டவேண்டுமென்று அவர்களுக்கு சொல்லும்படியும் கட்டளையிட்டு வருவது வழக்கம். இப்படியிருக்குங் காலத்தில் சென்ற நூற்றாண்டின் கடைசியில் மகம்மதியருடைய அரசாட்சியின் பலம் குறைந்து போகவே, இந்தியாவின் பிரதான சக்கிரவர்த்தியாக டெல்ஹியில் ஆண்டு வந்த சக்கரவர்த்திக்கு ஒருவரும் பயப்படவில்லை. இவர் பேருக்கு மாத்திரம் சக்கிரவர்த்தி என்ற பெயரைப்பெற்றிருந்தார். சிற்றரசர்கள் சுதேச்சையாய் தங்கள் இராஜ்ஜியத்தை ஆளத்தலைப்பட்டார்கள். அதனால் மகமதியர்களுடைய பராக்கிரமமும்,சக்கிரவர்த்தி என்கிற மதிப்பும் போய்விட்டது. இவர்களுக்குள் அடங்கி அரசுபுரியும் இராஜாக்களும் இவர்களுக்கு அடங்காமல் தங்கள் தங்களுடைய தேசங்களை தங்களிஷ்டப்பிரகாரம் அரசுபுரிய தலைப்பட்டு கலகஞ்செய்ய ஆரம்பித்தார்கள். இதனால் இவர்களுக்கு அபகீர்த்தியுண்டானது மல்லாமல், இவர்களுடைய தேசங்களும் பலவீனமடைய ஆரம்பித்தன. மகமதிய ஆளுகையில் கடைசியாக வங்காள இராஜதானியை அரசுபுரிந்தவர் ஆல்வர்டிகான் என்பவர். இவர் அதிக பராக்கிரமசாலி. ஆகிலும் இவருடைய ஆளுகையில் சண்டை அதிகரித்தேயிருந்தது. இவர் தன்னுடைய பேரனை சுராஜிடௌலா என்ற சிறுவனை நவாபாக ஏற்படுத்திவிட்டு கி. பி. 1756ம் வருஷம் இறந்துபோய் விட்டார். அப்பொழுது சுராஜிடௌலா பதினெட்டு வயதுடையவராயிருந்தார். இவர் காலத்தில் இவராளுகையின் கீழடங்கிய நான்கு பராக்கிரமமுள்ள சுதேச இராஜாக்கள் இருந்தார்கள். கிருஷ்ணநகர் இராஜாவாகிய கிருஷ்ண சந்திரர் ஒருவரும், தெக்கணத்து இராஜாவாகிய இராஜ ராஜவல்லபர் என் பவரும், பாடலீபுரத்திற்கு (Patna.) இராஜாவாகிய இராஜராய்துர்லவர் என்பவரும், நாட்டூருக்கு இராணியும் உத்தமஸ்திரீயுமாகிய **ராணிபாபணி** என்கிற நால்வருமே. இந்நால்வரும் இராஜ்ஜிய பாரஞ்செய்வதில் வல்லமையுள்ளவர்களாகவும்,அநுபவமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். இவர்களைப்போலவே சுராஜிடௌலாவின் சேனைத்தலைவராகிய மியர்ஜாபர் என்பவரும், தனவந்தராகிய ஜகத்சத் என்பவரும் அக்காலத்தில் அதிக திறமையுள்ளவர்களாகவும், அநுபவமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். இந்த ஆறு பேர்களுந்தான் கடைசியாக வங்காள இராஜதானியை இங்கிலீஷ்காரர் வசம் ஒப்புவித்தார்கள். இது நிற்க:—மேற்சொல்லியவர்களில் ஒருவரும் நாட்டூர் இராணியாராகிய **ராணிபாபணி** அம்மாள் என்கிற உத்தமஸ்திரீயின் சரித்திரத்தை எழுதுகிறோம். நாட்டூர் தேசத்தின் வருஷவருமபடி ஒன்றரைக்கோடி ரூபாய். இதில் நவாபுக்கு வருடந்தோறும் கட்டவேண்டிய பகுதி ரூபாய் ஐம்பத்திரண்டுலக்ஷம். மிகுதி ரூபாயைக்கொண்டு ஐம்பதாயிரம் காலாட்படைகளையும், குதிரைப்படைகளையும் போஷித்து மிகுந்ததை இராஜ்ஜிய பொக்கிஷத்தில் சேர்த்துக்கொண்டு வருவார்கள்.

நாட்டூர் மகாராஜா அவர்கள் தமது குமாரரான ராஜராமகண்ட் என்பவருக்கு பாபனி என்ற ஒரு இராஜவம்சத்தைச் சேர்ந்த பெண்ணை விவாகஞ்செய்வித்தார். விவாகமாய் சில வருடங்கள் சென்ற பின்பு ராஜராமகண்ட் என்பவர் தனது தகப்பனார் ஆண்டு வந்த நாட்டூர் தேசத்தின் இராஜபட்டத்தை யடைந்தார். இவர் பட்டத்துக்கு வந்தவுடன் துன்மார்க்கர்களுடன் சேர்ந்து, பொக்கிஷத்திலிருக்கும் திரவியத்தை யெல்லாம் வீண் விஷயங்களில் செலவு செய்து வந்தார். "கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது" என்றபடியும், "நளமகாராஜாவானவர் புஷ்கர ராஜாவினிடத்தில் சூதாட்டம் ஆட ஆரம்பிக்கும்போது மந்திரிகள் எவ்வளவோ நீதிகளை யெடுத்துச்சொல்லியும் கேட்காமல்போனது போலவும்" தன் தகப்பனார் காலமுதல் மந்திரியாயிருந்து வருகிற தயாராம் என்கிற மந்திரி அநேக புத்திமதிகளைச் சொல்லியும் அவர் கேட்காமல் இருந்துவிட்டார். அதனால் மந்திரியாகிய தயாராம் என்பவருக்கு அவரை வீண் விஷயங்களில் செலவு செய்யாமலிருக்கும்படி தடுக்க முடியாமலிருந்தது. இவருடைய புத்திசாதுரியமுள்ள மனைவியாராகிய பாபனி அம்மாளும் இது விஷயமாக தன் நாயகனுக்கு பல தடவைகளில் புத்திசொல்லியும் அவர் கேட்காமலே போய்விட்டார். மந்திரி தன்னுடைய கெட்ட நடத்தைகளுக்கு இணங்காதவராய் இருந்தபடியால் அவரை வேலையினின்றும் நீக்கிவிட்டார். "தண்ணீரை தாராளமாய்செலவழிப்பதுபோல" திரவியத்தை வீணான விஷயங்களிலெல்லாம் கண் தெரியாமல் செலவு செய்து வந்தார். "இனத்தாற்றியெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச் சீறிற் சிறுகுந்திரு" என்பது போல "மந்திரியினுடைய அபிப்பிராயங்களைக் கேளாமல் அவர் சொல்லும் நியாயங்களை வெறுத்து கோபிக்கின்ற அரசனுடைய செல்வம் கெடும்" என்றபடி தன்னுடைய இராசகாரியத்தைச் சரியாக கவனிக்காமலும், உத்தியோகஸ்தர், சேனைகள் முதலியோருக்கு சம்பளம் சரியாகக்கொடாமலும், நவாபுக்கு வருடந்தோறும் கட்டும் கப்பத்தைக் கட்டாமலும் இருந்து விட்டபடியால் பொக்கிஷம் காலியாய் பாக்கியாய் நின்று விட்டது. இதன் பேரில் "நாடொறு நாடிமுறைசெய்யா மன்னவனுடொறுநாடு கெடும்" என்றபடி "நாள்தோறும் தீமைகளை ஆராய்ந்து நன்மையைச் செய்யாத அரசனுடையதேசம் கெடும்" என்பது போல நவாபு அவர்கள் சில இராணுவ உத்தியோகஸ்தர்களை அழைத்து நாட்டூருக்கு உடனேபோய் இராஜராமகண்ட் அவர்களை பட்டத்திலிருந்து நீக்கி பட்டத்திற்குரிய வேறொருவரை நியமிக்கும்படி கண்டிப்பான உத்தரவு செய்து அனுப்பினர். அரசனுடைய உத்தரவின்படி நடப்பதே சேனைகளுடைய கடமையாதலால், இராணுவ உத்தியோகஸ்தர்கள் உடனே நாட்டூருக்குப் புறப்பட்டுப்போய் ராஜராமகண்ட் என்பவரை பட்டத்தினின்று நீக்கி வேறொருவரை நியமித்துவிட்டு நவாபு அவர்களிடம் வந்து தெரிவித்து விட்டார்கள். துர்ப்பாக்கியரும், ஏழையாய்ப் போய்விட்டவருமான ராஜராமகண்ட் என்பவர் தான் முன்பு நடந்துவந்த கெட்டநடவடிக்கைகளைப்பற்றியும், மந்திரியும், தன் பெண்சாதியும் முன்பு சொல்லிவந்த புத்திமதிகளை கேட்காமலிருந்ததைப்பற்றியும் தன்னைத்தானே நொந்து கொண்டு அதிக மனவருத்த

மடைந்தார். இனி நாம் என்ன செய்வதென்று விசனப்பட்டுக்கொண்டு, தன் பெண்சாதியுடன் மூர்ஷிடாபாத்தில் வசித்துக்கொண்டிருக்கிற தன் சிநேகிதராகிய ஜகத்சத் என்கிற தனவான் வீட்டிற்குப்போய் அவருடைய ஆதரவிலிருப்பது தான் நலமென்று யோசித்து, தன் பெண்சாதியை அழைத்துக் கொண்டு மூர்ஷிடாபாத்துக்குப்போய் ஜகத்சத் என்பவருடைய ஆதரவிலிருந்து வந்தார். இவர் இவ்விதம் எழ்மையாய்விட்டது இவருடையபுத்திக் குறைவினாலும்கெட்டசகவாசத்தினாலுமேயன்றிவேறல்ல. இவர் இவ்விதம் தன் சிநேகிதராகிய ஜகத்சத் என்பவருடைய வீட்டில் இருந்து வரும்பொழுது தனக்குப்பிரியமும்,புத்தி சாதுரியமுமுள்ள தன் பெண்சாதியை அழைத்து நமக்கு நல்லகாலம் கிடைக்குமா? ஐயோ உன்னுடைய வார்த்தையையும், புத்தி சாதுரியமும், அநுபவமுமுள்ள மந்திரியினுடைய வார்த்தையையும் கேட்காமலே போய்விட்டேனே என்று புலம்பினார். உடனே புத்திசாலியான அவருடைய பெண்சாதி ஈஸ்வரனை தியானித்து, தன் கணவனுக்கு சில ஆறுதல்களைச் சொல்லி, அதன் பின் மந்திரியாகிய தயாராம் அவர்களை அழைத்து தான் அணிந்திருந்த நகைகளைக் கழற்றி அவரிடம் கொடுத்து அவைகளை விற்று வரும்படி சொன்னாள்.

அவர் அவ்வண்ணமே அந்நகைகளை வாங்கிக்கொண்டு போய் விற்பனை செய்து அதனால் கிடைத்த பொருளை அந்தம்மாளிடம் கொடுத்தார். அந்தம்மாள் அப்பொருளைப் பெற்றுக்கொண்டு நவாபு அவர்களுடைய உத்தியோகஸ்தர்களுக்குலஞ்சம் கொடுத்து, நவாபு அவர்களிடம் எவ்விதமாவது சொல்லி தன் புருஷனை பழையபடி அரசனாக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். அவர்கள் அவ்விதமே நவாபு அவர்களிடம் சென்று, ராஜா அவர்கள் ஏதோ தெரியாத தனத்தால் இராஜ்ஜியத்தை அவ்விதம் ஆண்டாரென்றும், இப்பொழுது அதற்காக வருத்தப்படுகிறாரென்றும், நவாபினுடைய மனம் இளகும்படி சொன்னார்கள். அதன் பேரில் நவாபு அவர்கள் அவருடைய ராஜ்ஜியத்தை பழையபடி அவருக்கு கொடுக்கும்படி உத்தரவு செய்து விட்டார்கள்.

அவ்வுத்தரவை மேற்கொண்டவராகிய ராஜாராமகண்ட் என்பவர் தன் பெண்சாதியுடன் தன் சினேகிதராகிய ஜகத்சத்வினிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு நாட்டுருக்குச் சென்று, முன்போல இராஜ்ஜியத்தை ஆளத்தலைப் பட்டார்கள். ஜனங்களும் இவர்களுக்குமீண்டும் இராஜ்ஜியம் கிடைத்ததற்சாகவும்,அவர்களில்லாது தங்களுக்குண்டாயிருந்த வருத்தம் நீங்கியதற்காகவும் அதிக சந்தோஷமடைந்தார்கள்.

இன்னும்வரும்.

C. S. R.

Tit Bits. ஓர் சம்பாஷணை.

லக்ஷ்மி.—பார்வதி ஏது உன்னாத்துக்காரர் எப்போதும் விஸனப்பட்டுக் கொண்டிருக்கிறார். உடம்பு மெலிந்து கொண்டேவருகிறது. என்ன காரணம் அம்மா?

பார்வதி.—என் பிரியமுள்ள ஸகி நான் என்னசெய்கிறது! தெய்வத்தைத் தான் கேட்கவேணும். சாப்பிடுகிறபோது சந்தோஷ மென்கிறதே கிடையாது. சாப்பிட உட்கார்ந்தால்கால்வயிற்றுக்குக் கூடச்சாப்பிடு கிறதில்லே. நான் என்ன செய்வேன் சகி.

லக்ஷ்மி.—சாப்பாட்டுப் பதார்த்தங்களை நன்றாகப் பாகஞ்செய்து போட்டால் சாப்பிடாமலிருப்பரா? புருஷர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பொருளைச் சம்பாதித்துக்கொண்டு வருகிறார்கள். சாப்பாட்டையாவது வெகு நேர்த்தியாய்த் தயார் செய்து நாம் போடக்கூடாதா? இதைவிடத்தான் நமக்கு என்ன வேலே.

பார்வதி.—என்ன இப்படி சொல்லுகிறாய். எனக்கென்ன சமையல் பண்ணத்தெரியாதா? எனக்கு இருபது வயஸாச்சு, சமையல் கூடத்தெரியாமல் போகுமா? நான் வேண்டியமட்டும் சிரமமெடுத்து ஒரு நாளுக்கொருவிதம் குழம்பு, கறி இவ்விதம் மாஸத்தில் 30 வகை செய்து கொண்டுவருகிறேன். இத்தனே விதம் செய்தும் ஆத்துக்காரர் ஒரு நாளாவது திருப்தியுடன் சாப்பிடுகிறதில்லேயே. நான் என்ன தான் செய்கிறது! சொல்லேன்.

லக்ஷ்மி.—எங்களுக்குச் சமையல் செய்வதில் இரண்டு விதத்துக்கே கஷ்டமாயிருக்கிறது. உனக்கு முப்பதுவிதச்சமையல் தெரியுமென்கிறாய். எனக்கு முப்பது விதச்சமையலும்சொல்லித்தருவையா?

பார்வதி.—முப்பது விதச்சமையல் என்னாத்துக்காரருக்கு எவ்விதமாய்ச் செய்து போட்டேனென்றால் முதல் நாளில் உப்பே இல்லாமலும், இரண்டாம் நாளில் பாதி உப்புப்போட்டும், மூன்றும் நாளில் பாதிபுளி கரைத்தும், வேறொரு நாளில் புளியேயில்லாமலும், இன்னொரு நாளில் காரமேயில்லாமலும், இப்படி ஒன்று இருந்து மற்றொன்று இல்லாமலும் வகை வகையாய்ச் சமையல் செய்தும் ஆத்துக்காரருக்கு வேண்டியிருக்கவில்லேயே. நான் என்னசெய்கிறது. என்னேப்போல விதம் விதமாய் யாராவது சமையல் செய்வார்களா.? நீ தான் சொல்லேன் பார்ப்போம்!

லக்ஷ்மி.—(புன்சிரிப்புடன் சொல்லுகிறாள்.) சமையல்செய்வதில் நீ இவ்வளவு சாமர்த்தியமுள்ளவளா! இது வரையில் எனக்குத் தெரியாதே!! உன்னேப்போல கெட்டிக்காரரை நான் இது வரையில் பார்த்ததுமில்லே கேட்டதுமில்லே!!! முப்பது விதச்சமையல் யார் தான் செய்வார்கள்.!!!! நீ சமையல் செய்கிறதை உங்காத்துக்காரர் திருப்தியுடன் சாப்பிடாதது அவர்பேரில் குற்றந்தானம்மா!

வி. கோபால அய்யங்கார் பி. ஏ.

NEWS & NOTES.

கிருஷ்ணபாய் கெல்கார் என்ற மாது பம்பாயில் வைத்திய பரீக்ஷையில் முதலில் தேறினளாம். பம்பாயில் வைத்திய பரீக்ஷையில் முதலில் இது வரையிலும் ஒரு ஸ்திரீ கூட தேறவில்லையாம். இந்த மாது தேறினதுதான் முதல்தடவையாம்.

தெலுங்கு ஜனானபத்திரிகை ஆசிரியராகிய ம-ா-ா-ஸ்ரீ R. வெங்கிடசிவடு பி. ஏ. எல். டி. அவர்கள் இயற்றிய "குடும்ப சம்ரக்ஷணே" என்ற புஸ்தகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து நமது பத்திரிகையில் பிரசுரிக்கும்படி, அவர் நமக்கு உத்தரவு அளித்திருக்கின்றமையால், நாம் அதை நமது பத்திரிகையில் பிரசுரிக்க நிச்சயித்திருக்கிறோம்.

மேலும் கல்கத்தாவில் மஹா பாரதம், இராமாயணம், பாகவதம் முதலிய புஸ்தகங்களை இங்கிலீஷில் மொழிபெயர்த்தவரும், வடதேசத்து இந்து ஸ்திரீகளின் சா[illegible] ரத்தை எழுதியிருக்கிறவருமான மிஸ்டர் மன்மதநாத்தத் எம். ஏ. அவர்கள் இய[illegible] இந்துஸ்திரீகளின் சரித்திரத்தையும் தமிழில் பெயர்த்து நமது பத்திரிகையில் பிரசுரி[illegible] உத்தரவளித்திருக்கிறார். இதுவும் நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். இவர்[illegible] நமக்கு தாராளமாக உத்தரவளித்த தற்காக வந்தனமளிக்கின்றோம்.

ஒவ்வொரு பாடசாலையிலும், காலேஜியிலும் பிள்ளைகள் ஒரு சங்கம் ஏற்படுத்தி உ[illegible]த்தியாயர்களைக்கொண்டு அடிக்கடி உபந்நியாசங்கள் செய்வதும், ஓர் விஷயத்தைக்கு[illegible]த்து தர்க்கிப்பதும் வழக்கம். இத்துடன் நாடகங்களும் வேடிக்கையாய் ஆடுவதுமுண்[illegible] சென்றமீ 13உ வெள்ளிக்கிழமையதினம் சென்னை ப்ரசிடென்ஸி காலேஜியில் ப[illegible] கும் மாணாக்கர்கள் ஏற்படுத்தியிருக்கும் சங்கத்தின் சம்பந்தமாய் ஒரு கொண்டாட்[illegible] நடத்தப்பட்டது. அப்பொழுது ஷை காலேஜியில் புரொப்ஸராகவிருக்கும் டாக்[illegible] போரன் மனைவியாரும் இன்னும் சில ஐரோப்பிய ஸ்திரீகளும் வந்திருந்தார்கள்.

இன்னும் ஆங்கிலேய கனவான்களும் இந்திய கனவான்களும் வந்திருந்தார்[illegible] இவர்களை சந்தோஷப்படுத்தும் பொருட்டு மாணுக்கர்கள் ஆங்கிலேய கவிச்சக்கிரவர்[illegible] யாகிய ஷேக்ஸ்பியரால் இயற்றப்பட்ட வெனிஸ்வர்த்தகன் என்ற நாடகத்தை [illegible] னார்கள். இவர்களைப் பழக்கி ஆட்டத்தை நடத்தினவர் டாக்டர் போரன் மனைவி[illegible] இவருக்கு இந்திய ஸ்திரீகளிடத்தில் மிக்கப்பிரியம். தமது சகோதரிகள் கல்வி[illegible] நாகரீகத்திலும் விருத்தியடையவேண்டுமென்ற பூர்ண எண்ணமுடையவர். இவர் [illegible] முழுவதையும் நடத்தி மேல் பார்வை பார்த்ததன்றிதாமே ஒரு வேடம் தரித்துக[illegible]ண்டு நடத்தினார். அந்த காலேஜியில் படிக்கும் இன்னும் இரண்டு ஆங்கிலேயப் பெ[illegible]ளும் வேடம் பூண்டு நடித்தனர். வெகு விமரிசையாகவேயிருந்தது. நாடகம் முடிந்[illegible] யாவருக்கும் வந்தனமளிக்கப்பட்டு சபைகலைந்தது.

இக்கூட்டத்தைக்குறித்து சுதேசமித்திரன்பத்திராசிரியர் மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய அய்யர் பின் வருமாறு அபிப்பிராயப்பட்டு தமது மித்திரனில் பிரசுரித்திருக்கிறார்:— "ஆண்களும்,பெண்களும்,சினேக சம்பந்தத்தில் பழகுவதால் உண்டாகும் நன்மை அளவு கடந்தது. பெண்களுடன் சகவாசம் இல்லாமற்போனால் ஆண்களிடத்தில் தயை, சாந்தம், ஒழுக்கம், நாவடக்கம் முதலான உயர்ந்த குணங்கள் விருத்திபாகமாட்டா. இதற்குத் திருஷ்டாந்தம்,சகோதரிகளுள்ள ஒரு குடும்பத்தில் பிறந்த ஆண் குழந்தைகளேயும், பெண் குழந்தை யில்லாத ஒரு குடும்பத்தில் பிறந்த பிள்ளைகளேயும் பார்த்தால் தெரியவரும். ஒரு சகோதரியிடத்தில் சகவாசம் செய்யும்போது ஒருவன் மேலே நாம் குறிப்பிட்ட குணங்களேயெல்லாம் அடைவான். கடும்பேச்சும் நிந்தையும் அருவெருப்பை ...ண்டாக்கும் துர்ப்பாஷையையும், ஸ்திரீகளுக்கு நாணத்தையுண்டாக்கும் சொற்களே ...ம் உபயோகிக்கமாட்டான். இந்த சகவாசம் இல்லாதவன் முரடனுயும் சொல்நயமற்ற ...னுயும் இருப்பதுசகஜம்."

எறும்புகளுக்கெல்லாம் தலைமையானது இறந்துபோனபொழுது மற்ற எறும்பு...ளெல்லாம் கூட்டம் கூடி அழுவதுபோலிருந்ததாம். எல்லா எறும்புகளும் வரிசை... 2-வீசம் கிரமமாகவும் மெதுவாகவும் நடந்து செத்துக்கிடந்த எறும்பிடத்திற்கு ... ஒரு எறும்பு செத்த எறும்பிடத்திற்குப் போயிற்று. உடனே இரண்டு எறும்பு...ந்த செத்த எறும்பைத் தூக்கிக்கொண்டு மெதுவாகப்போயின. வேறு இரண்டு ...புகள் அவைகளுக்கு சமீபத்தில் போய்க்கொண்டிருந்தன. மற்றவைகளெல்லாம் ...சையாகச் சென்றதுகள். ஒரு தடவை செத்த எறும்பைத் தூக்கிக்கொண்டிருக்கிற ...ாடு எறும்புகளும் நின்றன. உடனே பின் செல்லுகிற இரண்டும் அவர்களுக்குப் ...ாக அதைத் தூக்கிக்கொண்டு சென்றன. இப்படி கடைசியில் சமுத்திர மண...ட சென்று அங்கு ஒரு சிறு குழியில் செத்ததைப் புதைத்தனவாம். இவை ... பார்த்திருந்த சிவப்பு எறும்புகளும் துக்கத்திற்காக வந்தனவாம். இது ஒரு ...க்கையேயாம்.

திருவல்லிக்கேணியில் நவம்பர்மீ 2-ம் தேதி முதற்கொண்டு 11வ வரையிலும் ...ப்பெண்கள் கோலாட்டம் ஆடிவந்தார்கள். இது சென்னையில் இப்பொழுது ...து புதுமையாயினும் வெளியூர்களில் ஒவ்வொரு வருடத்திலும் தீபாவளிகழிந்த ... சிறுமிகள் பத்து பதினைந்துநாள் கோலாட்டம் ஆடி கடைசிநாள் அதிக விமரிசை...ளர் கோலம் வருவது வழக்கம். இவ்விதம் இப்பெண்கள் திருவல்லிக்கேணியில் ...ருடம் பழகியது வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ S. சுப்பிரமணிய அய்யரின் பிரயத்தனத்தினுல் ...தென கேள்விப்பட்டு அதிக சந்தோஷப்படுகிறோம். கடைசிநாள் சுமார் ...ண்கள் நல்ல ஆடைதரித்துக்கொண்டு திவ்வியமான ஆபரணங்களேயும் பூண்டு ...பு தீவர்த்தி, பாண்டுவாத்தியம், மேளவாத்தியம் முதலியவைகளுடன் அதிவிம...ய் ஊர்கோலமாக தெருக்களில் கோலாட்டம் போட்டுக்கொண்டு போனுர்கள். ...நடைய கோலாட்டத்தைப் பார்க்க மிஸ்ஸஸ் கூலிங் அம்மாளும், மிஸ்ஸஸ் பிரா... அம்மாளும், இன்னும் சிலஐரோப்பிய ஸ்திரீகளும் வந்திருந்தார்கள். இந்த கோலாட்டத்திற்கு ம-ா-ா-ஸ்ரீ எஸ். சுப்பிரமணிய அய்யரவர்கள் சுமார் 50-ரூ. ...் செலவழித்து பெண்களேச் சந்தோஷிக்கச் செய்தார். இவர் இவ்விதம் செய்...வரும் மெச்சத்தகுந்ததே.

விக்டோரியா மகாராணியார்.

புது நூற்றாண்டு வாழ்த்து.

(1) வருக, இருபதாம் நூற்றாண்டே! வாழ்வு
தருக; எம்மா ராணித் தாய்க்கீழ்ப்—பெருக
வளமும் சுகமும் மதியும்; மிடிநோய்
உளவும் பகையும் ஒழிந்து!

(2) எங்கள் விக்டோரியா வாழி! எழிற்கரத்தில்
செங்கோலும் வாழி! திருமுடிமேல்—நன்க
மையும் இந்தியா மணியும் மாதர்மனோரஞ்ச
னியும் தமிழும் வாழி நிலத்து!

ஓர் நேசன்.